தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 95

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ 24—0—0
6 மாதம் ரூ 12—0—0
3 மாதம் ரூ 6—0—0
[illegible]

THE "NAM NADU" A TAMIL DAILY. THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: புரட்டாசி 16உ வெள்ளி (2—10—53) ★ ★ ★ வெளியீடு: புரட்டாசி 17உ சனி (3—10—53)


# நேருவின் சுந்தர முகம், கருப்பு கொடி கண்டு சோகச் சித்திரமாக மாறிற்று!

## தண்ணெனும் சாந்தத் தோற்றம் கடுகடுப்பான கோரக் காட்சி!

## என்றும் கண்டிராத கருப்புக் கொடிகளை நோக்கி வட நாட்டு அடிமை வியாபாரி தலை கவிழ்ந்தார்!

### நாவடக்கம் தெரியாத 'நான்சென்ஸ்' மூலவருக்கு, தி. மு. கழகம் கற்றுக்கொடுத்த நல்ல பாடம்!

சென்னை, அக். 2—

வடநாட்டு ஏகாதிபத்திய மூலவர் பண்டித நேரு இன்று சென்னையில் கருப்புக் கொடிகள் மத்தியில் பவனி வந்தார். "நேருவே திரும்பிப் போ" என்ற பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் பேரொலி, நிமிர்ந்து நின்று வந்த நேருவைத் தலை குனிய வைத்தது.

சென்னை, மவுண்ட் ரோடில் திறந்த வானில் வந்த நேரு, தேனாம்பேட்டையிலிருந்து மவுண்ட் ரோடு சிம்ப்சன் வரையில் கருப்புக் கொடிகளையே கண்டார். "நேருவே—திரும்பிப் போ" என்ற ஒலியையே கேட்டார். "இதற்கு முன் யான் வந்த சென்னையா இது?" என்று ஆச்சரியமும், அச்சமும் கலந்த சிந்தனையை முகத்தில் தேக்கி வந்துகொண்டிருந்தார் நேரு.

"இந்தியாவின் முடிசூடா மன்னராகவும், ஆசியாவின் ஜோதியாகவும்" விளம்பரப்படுத்தப்பெற்று—திக் விஜயத்திலீடுபட்டு வந்த நேருவிடம் தென்னாட்டின் தலைசிறந்த மக்கள் இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சென்னைக் கிளை, தனது அதிருப்தியையும், அருவருப்பையும், பெருத்த அளவில் காட்டிக் கொண்டது. தி. மு. கழக வரலாற்றிலேயே, மிக மிகக் குறிப்பிடத் தக்க வகையில், இதற்கு முன் யாருக்குமே காட்டியிருக்க முடியாத அத்தனை சிறந்த முறையில் அமைந்திருந்தது கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம்.

வடநாட்டு ஏகாதிபத்தியத்தின்மாட்டு, நேருவின் துடுக்குத் தனத்தைக் கண்டு, தென்னாட்டார், எவ்வளவு வேதனையும் ஆவேசமும் கொண்டுள்ளனர் என்பதை, இன்று சென்னை மவுண்ட்ரோடு எடைபோட்டு காட்டிற்று.

சுந்தர முகத்தோடு காட்சி யளிக்கக்கூடிய நேரு, இன்று சோகச் சித்திரமாகவே ஆனார்.

சென்னைக்கு இன்று நேரு வருகையை யொட்டி அவருக்குக் கருப்புக் கொடி காட்டி, "நேருவே திரும்பிப்போ," என்று கூறி, திராவிட முன்னேற்றக் கழகத்தார் தங்களது அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று, சென்னை மாவட்ட முன்னேற்றக் கழகம் அறிவித்திருந்ததை யொட்டி, இன்று, பல்லாயிரக்கணக்கான தோழர்கள், சென்னை தேனாம் பேட்டையிலிருந்து, சிம்ப்சன் கம்பெனி வரையில் கருப்புக் கொடி தாங்கி, திரண்டு நின்றனர்.

காலை 9-30 மணிக்கு, நேரு ஏறி வந்த மோட்டார், தேனாம்பேட்டைக்கு சமீபத்தில் வருகையில், காட்டப்பெற்ற கருப்புக் கொடிகளின் எண்ணிக்கையும், எழுப்பப் பெற்ற 'திரும்பிப் போ' என்ற ஒலியும், 'ஜெமினி' அருகில் இருமடங்காகி, ஆயிரம் விளக்கு அருகில் மும்மடங்காகி, ஸ்பென்சர் 'ஆர்ட்ஸ்'கல்லூரி அருகில் ஐந்தாறு மடங்காகி, ரவுண்ட்டானாவில் பன்மடங்காகி, சிம்ப்சன் கம்பெனி அருகில் எல்லையற்றுப் போய்விட்டது.

நேரு, தனது பொது வாழ்வில் என்றுமே கண்டும், கேட்டுமறியாத எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்; சென்னைத் தோழர்கள் கண்ணியம், கட்டுப்பாட்டைக் கேடயமாக வைத்து, தன்னிடம் காட்டிக் கொண்ட அருவருப்பு

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## மதுரை மாவட்டத் தோழர்களுக்கு!

★

3—10—53-ந் தேதியன்று பண்டித நேரு வருகையின்போது தி. மு. கழகத்தின் சார்பாக அன்னாருக்கு கருப்புக்கொடி காட்டி, அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்வதென மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயற்குழு தீர்மானித்திருக்கிறபடியால் மதுரை மாவட்டத்திலும், சுற்றுப்புற மாவட்டங்களிலும் உள்ள இயக்கத் தோழர்கள் கலந்துகொள்ள வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம். அப்படி வருகிற தோழர்கள் அவரவர்கள் இஷ்டம்போல் கண்ட கண்ட பகுதிகளில் நின்று விடாமல்; முதலில், மதுரை நகர் தி. மு. கழகஅலுவலகத்திற்கு வந்து தகவலளித்து குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேர வேண்டுமென மதுரை நகர தி. மு. கழகச் செயலாளர் எஸ். முத்து கேட்டுக்கொள்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## நகரில் காங்கிரஸ் கூலிகள் வெறியாட்டம்

## உடுப்பில்லா போலீசின் தடி அடி தர்பார்

### இரத்த வெறி ஆச்சாரியின் பழிக்கஞ்சா பாதகம்!

திராவிட இன எழுச்சியின் தலையாய வெற்றி!

### தோழர்கள் பலருக்குக் காயம்; எண்ணற்றோர் கைது

சென்னை, அக். 2—

சென்னை, காங்கிரஸ் கூலிகள், இன்று, கட்டவிழ்த்து விடப்பெற்றனர். காங்கிரஸ் தலைமை. சென்னைக்கு வருகை தருகையில், தி. மு. கழகத்தினர் கருப்புக்கொடி காட்ட இருக்கின்றனர், என்பதைத் தெரிந்த, சென்னை அதிகார சார்புள்ள—அதிகாரச் சார்பற்ற காங்கிரசார், திராவிடத்தில் செத்துக் கொண்டிருக்கும் காங்கிரசை, நிலை நிறுத்தும் வீண் முயற்சியில் ஈடுபட்டு—ஒரு சில 'நாறு'களை அள்ளி வீசி, சிற்சில கூலிகளை அமர்த்தி, அவர்கள் கையில் பெரும் பெரும் காங்கிரஸ் கொடிகளையும் தந்து நிறுத்தி வைத்திருந்தனர்.

"ராஜாஜி மண்டபத்துக்கு 10-மணிக்கு நேரு வர இருக்கிறார் என்பதைத் தெரிவித்த நம் தோழர்களும், பொதுமக்களுமாக சுமார் 5,000 பேர் சிம்ப்சன் கம்பெனிக்கு எதிரில் திரண்டிருந்தனர். போலீஸ் வளையம் தோழர்களைக் கட்டுப்படுத்தி, நேப்பியர் பார்க் வரை நிறுத்தி வைத்திருந்தது. நேரு வருகையை எதிர்பார்த்து நின்றிருந்தனர் தோழர்கள். சுமார் 10-மணி யளவில், காங்கிரஸ் கொடிகளை யேந்திய 'கூலிப் பட்டாளம்' ஒன்று, சிந்தாதிரிப்பேட்டைப் பகுதியிலிருந்து ஒலிகளை எழுப்பிக்கொண்டு, மங்லர்களைப்போல் ஓடிவந்து,—நம் தோழர்கள் ஆயிரக் கணக்கில் திரண்டிருந்த கூட்டத்தில், வீராவேசத்தோடு நுழைந்தனர். அவர்கள் வைத்திருந்த கொடிக் கம்புகள் பலவும் உருக்குப் பாய்ந்ததாகவும், இரும்பு வளையங்கள் பதிக்கப்பட்டவை யாகவும் இருந்தன.

இத்தகைய குண்டர்கள், நம் கூட்டத்தில் வந்து பலாத்காரமாக நுழைவதை, போலீசார் தடுக்கவே இல்லை; தடுக்க முயற்சிக்கவும் இல்லை. குண்டர்கள் இதற்காகவே தயாரானவர்களாகையால், தங்கள் பலங்கொண்டவரையில், கூட்டத்தினரை, கம்பு சுழற்றித் தாக்கிவிட்டு, கொடித் துணிகளைப் பறிகொடுத்துவிட்டு கம்புகளோடு மின்னல் வேகத்தில் மறைந்தனர். அவர்கள் யாவரும் மறைந்த பின்னரே போலீசார், தடியடிப் பிரயோகத்தைத் துவக்கினர்.

அமைதியே அணிகலனாகக் கொண்டு நேருவுக்கு அருவருப்பு காட்டிக் கொள்ள வந்திருந்த நம் தோழர்கள் தடியடிக்கும் அசையாமல் அப்படியே நின்றிருந்தனர்.

பின்னர் போலீசாரும் தடியடியை நிறுத்திக் கொண்டு "அமைதிகாக்க" முற்பட்டனர்.

காங்கிரஸ் கூலிகளுடையவும், போலீசாருடையவும் தாக்குதலுக்காளான நம் தோழர்கள் இன்று எண்ணற்றோர்! இவ்விரு தரத்தாரும் இன்று மிகுக உணர்ச்சியோடு நடந்து [illegible] வேண்டும். உடுப்பில்லாத நூற்றுக் கணக்கான போலீசார் குண்டாந் தடியுடன் கூட்டத்தில் நின்றிருந்த நம் தோழர்களைத் தாக்கியிருக்கின்றனர். மன்றவைபிலடிபட்டு — [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★

## ஐவர் சிறையில்!
## இன்று
## 32-வது நாள்

★★★★★★★★★★★★★★★★


# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 2-10-1953 வெள்ளி


# காந்தி பண்டிகை!

இன்று உலகப் பெரியார் காந்தியின் பிறந்த நாள், இந்தியத் துணைக் கண்டம் முழுதும் கொண்டாடப்படுகிறது. வெளிநாடுகளிலும் கொண்டாடப் பெறும் இத்திருநாள் என்பதில் ஐயமில்லை.

காந்தி பிறந்தநாள் விழா காங்கிரஸ் கட்சியினரின் 'காங்கிரஸ்' ஆகும். காந்தியாரின் படம் கண்கவர் வனப்புள்ளதாய் ஆக்கப்படும். மலர் மாலைகள் அணிவிக்கப்பெறும். மின் விளக்குகள் ஜோடிக்கப்படும். திருவீதி வலம் வரும். அவருடைய அருமை பெருமைகள் அனைத்தையும் ஓதாமலிருப்பதில்லை. அதற்காகவே இருந்துவரும் காங்கிரஸ் பூசாரிகளால் புகழ்ந்துரைக்கப்படும். விருந்தும், விழா முடிந்துவிடும்.

கிருஷ்ண ஜயந்தி ராமநவமி போன்ற பண்டிகைகளைப் போலவே காந்தியார் பிறந்தநாளும் ஆண்டுக்கு ஒருமுறை காங்கிரஸ் பக்தர்களால் விமரிசையாகக் கொண்டாடப்பெறும். வெற்றிகரமாக முடிந்துவிடும்.

"யானை மேல் அம்பாரி அமைத்து, அதில் அலங்கரித்து கவர்ச்சிமிக்க காந்தி படத்தை வைத்து, ஊர்வலம் வந்தார்களாம். கலந்துகொண்டவர்கள் ஏராளமாம்."

"சிங்காரிக்கப்பட்ட குதிரை மீது, காந்தி படத்தை வைத்து, பேர்பெற்ற ஊர் நடனக்காரர் நாட்டியமாட, அதற்குக் கொஞ்சமும் சளைக்காதவர் தவுல் அடிக்க, பெருந்திரளான மக்கள் புடைசூழ தெருத்தெருவாய் வலம் வந்தனர்."

"முத்துப் பல்லக்கு வெகு ஜோர்! கண்ணாடி சப்பரம் கண்கொள்ளாக் காட்சி! விளக்கமைப்புக் கண்ணைப் பறித்தே விட்டது! இவ்வளவு ஆடம்பரத்தையும் கண்டு, மாற்றுக் கட்சியினர் வெட்கிப்போயிருக்க வேண்டும்."

"சாய்ச்சின வெள்ளாட்டுப் பால் சிறு கரண்டி அளவும் வேர்க்கடலை உருண்டை ஒன்றும், வந்திருந்தவர்களுக்கெல்லாம் தனித் தனியாகப் பிரசாதமாக வழங்கப்பட்டது. இப்படியல்லவோ கொண்டாட வேண்டும் காந்தி ஜயந்தியை?"

"ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கப்பட்டது. சீமான்களுக்கு அறுசுவை உணவு தரப்பட்டது."

காந்தி பிறந்ததின விழா கொண்டாடிய காங்கிரஸ் கனவான்கள், விழாவிற்குப் பிறகு சில நாள்வரை, சொந்தக் கட்சிக்காரரைக் காணும்பொழுதெல்லாம் இப்படியெல்லாம் பேசிக்கொள்வதை பலர் கண்டும் இருக்கலாம், கேட்டும் இருக்கலாம்.

பரிதாபம்! காந்தியாருக்குப் பிறந்தநாள் ஆண்டுதோறும் ஆண்டுதோறும் கொண்டாடுவதோடு, தாங்கள் அப்பெரியாருக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து முடித்துவிட்டதாகக் காங்கிரஸ் பெரியார்கள் தீர்மானித்துக்கொள்ளுகிறார்கள்.

இதற்காக அவர்கள் மீது குறைகூறிப் பயனில்லை. நொந்துகொள்வதும் ஆகப்போவது ஒன்றுமில்லை. அவர்கள் எத்தனைபேரை இப்படி பண்டிகையாகக் கொண்டாடிப் பழக்கப்பட்டுப் போயிருக்கிற சமுதாயத்தின் சந்ததிகள். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி துவக்கத்தில் உயிர் வாழ்ந்தபோதிலும், பதினெட்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கருத்து வளத்தோடு வாழ்ந்து வருபவர்கள். அவர்களுக்காக இரங்குவோம்! அவர்கள் செயல் கண்டு வருந்துவோம்!

உத்தமர் காந்தியை கோட்சே என்னும் மராத்திய பார்ப்பான் சுட்டுக்கொன்றான். சனாதனம் அவர் உயிரைக் குடித்தது. வருணாஸ்ரமம் அவரை விழுங்கியது.

அவருடைய சீடர்களோ, அவர் உயிரோடு இருக்கும் போதிலேயே, அவருடைய கோட்பாடுகளைக் கொன்று, ஆழக்குழி தோண்டிப் புதைத்துவிட்டனர்.

கொலையிலும் கொடிய கோட்சேவால் காந்தியாரின் உடலைவிட்டு, கட்புலனுக்குரிய உயிரைத்தான் பிரிக்க முடிந்ததேயல்லாது, அவ்வுத்தமரின் புகழைப் பறித்துவிட முடியவில்லை.

ஆனால், காங்கிரஸ் கட்சியினரால், கோட்சேயால் செய்ய முடியாததைத் தோற்றுவிப்போன, காந்தியாரின் கற்பனைகளைக் கண்மூடித் திறப்பதற்குள் சவமாக்கி முடிந்தது! பாசுபடுத்திவிட்டனர்! களங்கப்படுத்துவதில் முழு வெற்றி பெற்றும் விட்டனர்.

காந்தியாரை, உலக உத்தமர் ஆக்கியது, அவர், தனது வாழ்க்கையில் மேற்கொண்ட சிறந்த ஒழுக்கமேயாகும். அவர் ஓர் அரசியல் தலைவர் என்பதற்காக, அவரை உலகம் போற்றவில்லை. இந்தியாவிற்கு அரசியல் விடுதலை கிடைக்க இன்னல் பல ஏற்றார் என்பதற்காகவும் அவருக்கு உலகப் புகழ் கிடைக்கவில்லை. அவர், தனது தினசரி வாழ்க்கையில் அறநெறியைப் பின்பற்றி ஒழுகி வந்ததாலேயே, அவரை உலகம் பெருமையாகக் கொண்டது; இன்றும் கொண்டிருக்கிறது.

காந்தியாரின் எல்லாக் கோட்பாடுகளுக்கும் அடிப்படையாக உள்ளது ஒன்றே ஒன்று. அவருடைய நடவடிக்கை முழுதும் அந்த ஒன்றே ஒன்றை மட்டுமே அஸ்திவாரமாகக் கொண்டு எழுந்தது. என்ன அது?

'புனிதமான கொள்கையை அடைய, அதற்காக மேற்கொள்ளும் சாதனமும் புனிதமானதாக இருக்க வேண்டும்.'

'தூய்மையற்ற நடைமுறையினால், தூய்மையற்ற முடிவுதான் விளைவாகும்' என்பதுதான் காந்தியாரின் கோட்பாட்டிற்கெல்லாம் அடைக்கால் போல் உள்ளது.

...."மனித இதயத்தில் படிந்துள்ள மாசை, குத்தீட்டியின் துணை கொண்டு துடைக்க முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அந்தச் சாதனத்துக்கு மனித இதயம் இணங்கிவிடாது."

இந்த ஒரு உயர்ந்த அடிப்படைக் கோட்பாட்டின் காரணமாகத்தான் காந்தியார், உலக உத்தமர்களில் ஒருவராக மட்டுமல்லாமல், மேதைகளில் ஒருவராகவும் வைத்து எண்ணப்படுகிறார். அவரைப் பின்பற்றுவதாக தற்புகழ்ச்சி செய்து கொள்ளும் அவரது சீடர்களான காங்கிரஸ் கட்சியினரின் இன்றைய நடவடிக்கையில், எந்தத் துறையிலாவது கால்தொடிந்த ஊசியளவு, இக்கோட்பாடு பிரதிபலிக்கிறதா என்று பார்க்க வேண்டும். காந்தீயத்தின் இம் முக்கிய தத்துவத்தை, அவர் சீடர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்று எண்ணுவதுகூட உண்மைக்குப் பொருந்துமாறு இல்லவே இல்லை.

காந்தியின் சீடர்கள் உண்மையைத் தெரிந்து கொள்ளாததுகூட மன்னித்துவிடக் கூடியதேயாகும்.

இந்தப் பரமார்த்திகச் சீடர்களின் போக்கை மிஞ்சக் கூடியதாகவே, காங்கிரஸ் கட்டளைத் தம்பிரான்களின் போக்கும் என்றுமே இருந்து வந்திருக்கிறது.

காந்தீயத்தை, காந்தியார் பார்த்துக்கொண்டு இருக்கும் போதே, சவப் பெட்டிக்குள் வைத்து, காற்றும் புகாமல் மூடிப் போட்டு, ஆணி அடித்தவர்கள் இந்த மகானுபாவர்கள்தான்.

காந்தியாரின் பெயரை, தாங்கள் அதிகாரத்தில் இருந்துகொண்டு மனமொப்பிச் செய்துவரும் அக்கிரமங்களுக்கு ஒரு திரையாக, உபயோகப்படுத்திக்கொண்டு இருப்பவர்கள் இந்த அதிகார வெறியர்கள்.

காந்தியார் உத்தமர்—கோட்சே அதமன்—இவர்கள் எத்தர்கள்!

இக்கட்டளைத் தம்பிரான்கள், அவசியம் இருந்தாலும் இல்லாமற் போனாலும், அணுகுண்டு ஆங்கிலேயனை. வெறுங்கையோடு இருந்தத் தாங்கள் விரட்டிவிட்டதாக வீராடபுத்திர வீரம் பேசாத நாள் கிடையாது. இதை சரியென்றே ஒத்துக்கொள்வதானாலும், அக்காலத்தில இவர்களுக்கு பின்னணி பலமாக இருந்த ஜனசக்தியைக் குறித்து இவர்கள் எண்ணிப் பார்த்துப் பேசுவதே கிடையாது.

ஏதோ, இந்த அற்புதப் பிருகிருதிகளின் வாய் சவடாலுக்குப் பயந்துதான் வெள்ளையன் வெளியேறிவிட்டதாக, வாய்வீச்சு வீசுகிறார்கள். 'தலைவர்' என்ற சொல்லிலேயே 'அவர்' வழி நிற்பவர்கள் பலர் இருக்கிறார்கள் என்னும் உண்மை நிரம்பி இருப்பதைக் காணலாம். இன்றுள்ள காங்கிரஸ் 'தலைவர்கள்' என்ற சொற்கள் அனைத்துக்கும், அச்சொற்களுக்கு இயல்பாக உள்ள விரிந்த பொருளைக் கொடுப்பதற்கில்லை. பெருங்காயம் இருந்த பாண்டம்—மிச்சம் மீதி—சென்ற காலத்துச் சிதறிய சின்னங்கள்! அவ்வளவுதான்!

ஜனசக்தியை அவர்கள் அலட்சியப்படுத்திவிட்டார்கள். அவர்கள் புதிதாகப் பெற்றுள்ள அதிகார அந்தஸ்து, அவர்களுக்கு தற்காலிகமாகக் கொடுத்திருக்கும் பலத்தின் துணைகொண்டு, ஜனசக்தியைக் காலில் போட்டுத் துவைத்து மிதிக்கத் துணிந்துவிட்டார்கள்.

ஜனசக்தி, காற்றடைத்த பெரும் பந்துக்குச் சமம். அதன்மேல் ஏறி நின்றுகொண்டு, ஜனசக்தியைத் தங்கள் காலின் கீழ் போட்டு மிதித்துக்கொண்டு இருப்பதாக மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறார்கள் காங்கிரஸ் சட்டாம்பிள்ளைகள். அதே நேரத்தில், அவர்கள், பந்தின்மேல் நின்றுகொண்டு தவியாய்த்தவிப்பதை அவர்களும் உணருகிறார்கள்—மற்றவர்களும் உணர்ந்திருக்கிறார்கள். அந்த ஜனசக்தி பந்து, இவர்களுடைய சம நிலை, ஏதாவது ஒரு பக்கம் ஒரு கோடு தாண்டினாலும், இவர்களைக் குப்புறக் கவிழ்த்துவிடும். இதன் உண்மையை, வரலாறு, நமக்கு அளித்துக்கொண்டு இருக்கிறது. நிற்க,

காங்கிரசைக் கலைத்துவிட வேண்டும் என்றும், இந்திய அரசியல் விடுதலையடைந்ததும், காந்தியார் மனம் நொந்து கூறினார். சீடகோடிகளா அதை ஒரு பொருட்டாக மதிப்பவர்கள்? காங்கிரஸ் மீது மக்கள் கொண்டுள்ள பற்றை, தங்களுடைய புகழுக்கும் ஏனைய சுகத்துக்கும் சாதனமாக்கிக் கொள்ள நீண்ட காலமாகத் திட்டம் போட்டிருந்தவர்கள் எங்காவது, காங்கிரசைக் கலைத்துவிட சம்மதிப்பார்களா? காந்தியாரின் சொல்லைப் புறக்கணித்து நடக்கத் திட்டமிட்டு நடந்தவர்கள்தான், இன்று காந்தி பண்டிகையை ஆர்வத்தோடு கொண்டாடுகிறார்கள்.

காந்தியார் கற்பனை செய்துகொண்டிருந்த சுயராஜ்யத்திற்கும், அவருடைய கட்டளைத் தம்பிரான்கள் உருவாக்கி வரும் சுயராஜ்யத்திற்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உண்டு.

"சிலர் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதல்ல உண்மையான சுயராஜ்யம்; அதிகாரத்தை மறத்துக்குப் பயன்படுத்தும் காலை அதை எதிர்த்துப் போராட அனைவரும் நெஞ்சுரம் பெறுவதுதான் உண்மையான சுயராஜ்யமாகும்" என்று, தனது சுயராஜ்ய லட்சணத்தை காந்தியாரே வரையறுத்துக் கூறியுள்ளார். காங்கிரஸ் கட்டளைத் தம்பிரான்களின் அக்கிரம ஆட்சியுடன், காந்தியாரின் இக்கருத்துரையை ஒப்பிட்டுப்பார்க்க வேண்டுகிறோம்.

"இதுவரை நாம் வாழ்வதற்காக கிராம மக்கள் பலலாயிரக்கணக்கில் தங்கள் உயிரை அர்ப்பணம் செய்துவந்திருக்கிறார்கள். இப்பொழுது நாம் செத்தாக வேண்டும், அவர்கள் வாழ்வதற்காக" என்றார் காந்தியார். இந்தப் பொருளுரையை எவ்வளவு தூரம் அதிகாரபீடத்தில் உள்ள காங்கிரஸ் கனவான்கள் நிறைவேற்றி வருகிறார்கள் என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் நடைபெறும் போரைக் குறித்து காந்தியாரின் கருத்து என்ன என்று பார்ப்போம்.

"நாட்டின் அளவு கொண்டாவது பொது மக்கள் நிலை கொண்டாவது பார்க்கின்ற நிலையில், போர் என்பது, கண்ணியமாக அழைக்கப்படும் காலித்தனம்!" என்று விளக்கம் தந்துள்ளார் காந்தியார். காங்கிரஸ் சர்க்காரின் அடக்குமுறை வெறியாட்டங்களுக்கும் இந்தப் பெயர் பொருந்துமா பொருந்தாதா என்று முடிவு காணும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டுவிடுகிறோம்.

அரசியல் சேவையா அல்லது அம்மன் கோயில் திறப்பு விழாவா என்று பிரித்துப் பார்க்க முடியாமல், ஆசாரியார் நாள் தவறாமல் அரசியல் ஹரிகதாகாலட்சேபம் செய்து வருகிறாரே, இதையும் காந்தியார் கண்டித்தே இருக்கிறார்.

"மதம் தனி ஒருவரைப் பொறுத்தது; அரசியலில் அதற்கு ஒரு துளியும் இடம் கிடையாது" என்று, இடித்துக்கூறியுள்ளார் அந்த அறவோர்.

"நான் கனவு காணும் சுயராஜ்யம் ஏழைகள் ராஜ்யம். இன்று அரசர்களும், பிரபுக்களும் அனுபவித்துவரும் வாழ்க்கை வசதிகளை ஏழைகளும் அனுபவிக்கவேண்டும்." காந்தியார் கனவு இது. காங்கிரஸ் ஆட்சியில் இது வெறும் கானல் நீர்!

"மந்தை ஆடுபோல் மக்கள் செயல் புரிவது மக்களாட்சி முறையாகாது; தனி நபருக்குள்ள கருத்துச் சுதந்திரமும், செயலாற்றும் உரிமையும் விழிப்புடன் காப்பாற்றப்படுவதே மக்களாட்சி முறையாகும்." இது காந்தியார் மக்களாட்சி முறைக்குக் கூறியுள்ள மறுக்க முடியாத விளக்கம்.

அப்பெரியவரின் மோகனச் சிரிப்பில் பூரிப்படைகிறவர்களால் அவர் போதனையின் சிறப்பை உணர்ந்துகொள்ளவும் முடியாது; முடிந்தாலும் அவைகளைச் செயலில் காட்டவும் முடியாது!

இன்றைய காந்தி பண்டிகையில வெளிச்சம் இருக்கலாம், இரைச்சல் இருக்கலாம், ஆர்ப்பாட்டம் அதிக அளவில் இருக்கலாம். இவ்வளவையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, நுணுகி ஆராய்ந்தால்தான் காந்தீயம் கண்ணுக்கும் கருத்துக்கும் விளக்கமறத் தெரியக்கூடும். காந்தி பண்டிகையில், நாம் இந்தச் செய்தியை,—காங்கிரஸ் கனவான்களுக்கல்ல—நாட்டுமக்களுக்கு அன்பளிப்பாகத் தருகிறோம்.

# செங்கற்பட்டு மாவட்டத் தோழர்கள் விடுதலை

சென்னை, அக் 1—

ரயில் நிறுத்தப் போராட்டத்தில் ஜே. எ. வகாப் தலைமையில் கலந்துகொண்ட காஞ்சீபுரம், செங்கற்பட்டு, அய்யம்பேட்டை, அனகாபுத்தூர், படப்பை ஆகிய ஊர்களைச் சேர்ந்த தோழர்கள் ஜே. எ. வகாப், எஸ். டி. ஜயராமன், என். கோதண்டராமன், அரசிளங்கோ, வி. பாலகிருஷ்ணன், கோவிந்தராசன், குதரசேகரன், பொன்னுசாமி, நித்யானந்தம், ரத்தனம், சி. என். கன்னியப்பன், சண்முகம், கூடுகன், டய்லர் (பல்லாவரம்), செவிளிமேடு கோபால், அர்த்தநாரி, முத்துகுமாரசாமி ஆகியோர், மூன்று மாத கடுங்காவல் தண்டனைக்குப் பின் இன்று காலை விடுதலை அடைந்தனர்.

அவர்களை சென்னை தி. மு. கழகத் தோழர்கள் கோ. செங்குட்டுவன், இளம்பரிதி, அ. ரகுநாதன், தி. கு. ராசபாதர், ராசமாணிக்கம் ஆகியோர், மாலை அணிவித்து வரவேற்றனர். தோழர்கள் அனைவரும், தாலமுத்து—நடராசன் கல்லறைக்குச் சென்று மரியாதை செலுத்தினர்.

## 14-வது வட்டத் தோழர்கள் விடுதலை

சென்னை, அக். 1—

சென்னை, 14-வது வட்டத்தில், தடையை மீறிப் பொதுக் கூட்டமும், ஊர்வலமும் நடத்தி, 2-வாரம் சிறை தண்டனை பெற்ற தோழர்கள் கோ. செங்குட்டுவன், அ. ரகுநாதன், வள்ளிமணாளன், குமரன் ஆகியோர் 29-ந் தேதி காலை விடுதலை அடைந்தனர். கழகத் தோழர்கள் வரவேற்பு அளித்தனர்.

## அம்மையப்பன் தோழர்கள் விடுதலை

குளிக்கரை, செப். 30—

அம்மையப்பன் திராவிட முன்னேற்றக் கழக சார்பாக ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து இரண்டு மாதம் சிறை வாசம் அனுபவித்து, கீழ்க்கண்ட தோழர்கள் 15—9—53லிலும், 19—9—53லிலும் விடுதலை அடைந்தார்கள். விவரம்:—

வே. சோமசுந்திரம், கோ. தங்கவேலு, வெ. ரெங்கராசு, ப. செயசந்திரன், சே. கோபாலகிருஷ்ணன், பி ராஜாங்கம், ஆ. தங்கையன், ரெ. தங்கையன், டி. சிவஞானம், அழகப்பன், கோவிந்தராசன், எம். கோவிந்தராசு, சிவப்பிரகாசம், நாராயணசாமி, கோவிந்தசாமி, நாகப்பன், கோதண்டம், சுவாமிநாதன்

## தமிழ்தான்; சமஸ்கிருதம் அல்ல!

மலாயா பல்கலைக் கழகத்தில் புதிதாக ஏற்படுத்தப்படும் இந்தியப் பகுதியில், தமிழ் மொழிதான் இடம் பெறும் என்று தெரிகிறது

மலாயா பல்கலைக் கழகத்தில், இந்தியப் பகுதியைத் துவக்குவதற்கான சிபாரிசுகளைச் செய்ய தோழர் நீலகண்ட சாஸ்திரி முன்பு வரவழைக்கப்பட்டிருந்தார். அவர் தமது சிபாரிசில் சமஸ்கிருதத்தையும் இணைத்திருந்தார்.

1954—55-ம் ஆண்டில் தமிழ்ப் பகுதி செயலாற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது

கேம்பிரிட்ஜ் ஸ்கூல் சர்டிபிகேட் பரீட்சை எழுதும் மாணவர்களில், அதிகம் பேர் விரும்பி எடுத்துப் படிப்பது தமிழே என்று புள்ளி விவரம் காட்டுகிறது.

—'தமிழ் முரசு', 10-9-'53

## தஞ்சை மாவட்ட படித்த வேலையில்லாதோர் மாநாடு

★

4—10—53 ஞாயிறன்று காலை 9-30 மணிக்கு பேபி டாக்கீசில், தோழர் ஆர். தம்பையா அவர்கள் தலைமையில், தோழர் எஸ். ரெங்கராமானுசம் மாநாட்டைத் திறந்து வைப்பார்.

தோழர்கள் ப. வீராசாமி பி.ஏ., எம்.பி., ஏ கோவிந்தசாமி எம்.எல்.ஏ., ஜி. நாராயணசாமி, எம். எல். ஏ., எஸ். ராமலிங்கம் எம்.எல்.ஏ., என். சிவராசு எம்.எல்.ஏ., எம். நூர்தீன் எம்.எல்.ஏ., தோழியர் அருண்மொழி, பி.ஓ.எல். ஆகியோர் மாநாட்டில் கலந்து கொள்வர்.

## வாலிபர் முன்னேற்ற சங்கம் முதலாவது ஆண்டு விழா

புதுக்கோட்டை, அக். 1—

4—10—53 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மேற்படி சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா சங்கததின் முன்பு நடைபெறும். அவ்வமயம் மதுரை தோழர் சி. காந்திதாஸ், எம்.ஏ. பி. எல்., அட்வகேட் அவர்கள தலைமை வகிப்பார். பசும்பொன் தோழர் உ. முத்துராமலிங்கத் தேவர், எம் எல்.ஏ., அவர்கள் சொற்பொழிவாற்றுவார். அன்று மாலை 7 மணிக்கு திலகர் திடலில் மாபெரும் பொதுக் கூட்டத்தில், தோழர் உ. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் தற்கால அரசியல் நிலையைப் பற்றி பேசுவார்.

## குழந்தைப் புத்தகக் காட்சி

சென்னை, அக். 2—

ஆண்டுதோறும் குழந்தை எழுத்தாளர் சங்க ஆதரவில் நடந்துவரும் குழந்தைப் புத்தகக் காட்சி, அக். 17, 18 ஆகிய இரு தேதிகளிலும் சென்னை புரசைவாக்கம் லேடி எம்.ஸி.டி. எம். உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும். நிதி மந்திரி கனம் வி. சுப்ரமணியம் அவர்கள் காட்சியைத் திறந்து வைப்பார்.

# திராவிடத்தில் ஜவகர்

★

## மதுரையில்!

அக்டோபர் 3:

பிற்பகல் 1-30 மணிக்கு, விமான மூலம் மதுரைக்கு வருதல்.

மாலை:- மதுரை மீனாட்சி கோயிலுக்குப் போதல்.

மாலை 6-30 மணி:- மதுரை பொதுக்கூட்டம்.

★

## கோவையில்!

அக்டோபர் 4:

காலை 7-45 மணி—மதுரையில் இருந்துவிமானம் மூலம் கோவை புறப்படுதல்.

காரில் மலம்புழா அணைக் கட்டுக்குச் செல்லல்.

காலை 10-45 மணி:- பாலக்காடு பொதுக்கூட்டம்.

பிற்பகல்:- பவானி சாகரம் அணைக்கட்டுக்குப் போதல்.

மாலை:- கோவை பொதுக்கூட்டத்தில் பங்கு கொள்ளல்.

அக்டோபர் 5:- கோவையிலிருந்து காலை 8-45 மணிக்கு விமான மூலம் வெளியேறல

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# கோவை, சேலம் மாவட்ட செயல் வீரர்களே!

★

நாவடக்கமில்லாமல், தமிழர் போராட்டங்களை, 'நான்சென்ஸ்' என்றுரைத்து, நமது நெஞ்சங்களைப் புண்ணக்கிய நேரு பண்டிதர், 4-10-53 அன்று கோவை வருகிறார்.

தலைவர்களையும், தொண்டர்களையும் சிறைக்குள்ளே தள்ளிவிட்டு, பவனி வருகிறார், பாராளும் முதல்வர் பண்டித நேரு!

கோவை, சேலம் மாவட்ட செயல் வீரர்களே! 4-10-53 ஞாயிறு காலை 10-மணி முதல் 12 மணி வரை, கோவை, ஒப்பணக்காரத் தெரு கடைசியில், உக்கடம் அருகில், நேரு, பாலக்காட்டிலிருந்து திரும்பி வரும் பொழுது, நமது அதிருப்தியைக் காட்ட, நாம் அனைவரும் அவருக்குக் கருப்புக் கொடி காட்ட வேண்டும்; நமது கண்டனத்தை அவர் உணர வேண்டும்.

கண்ணியமுடையோரே, கட்டுப்பாடு மிக்கோரே! அமைதி குன்றாது அணிவகுத்து நின்று கருப்புக் கொடி காட்டுவோம் வாரீர்!!

குறிப்பு:—கோவை, பாலக்காடு, மேட்டுப்பாளையம், பவானிசாகர் ஆகிய ஊர்களிலும் கருப்புக் கொடி காட்டப்படும்.

கோவை - செழியன்,
கோவை மாவட்ட தி. மு. கழக துணைச் செயலாளர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## "கோபால்ட்" குண்டின் கொடுமை!

ஜோஹன்னஸ்பர்க், செப். 29—

"கோபால்ட்" குண்டு வெடிக்கப்பட்டால், அப்பிரதேசம், மனிதர்கள் வசிக்க லாயக்கற்றதாக ஆகிவிடும்; சுமார் 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு, அங்கு மனிதப் பூண்டே இருக்க முடியாது. அங்கு மனிதர்கள் செல்ல வேண்டுமானால், முகமூடி, பிராணவாயு சாதனம் இவைகளுடன்தான் செல்லவேண்டும்; இல்லையேல், புற்றுநோய் ஏற்படும் என்று, பேராசிரியர் ஒருவர் கூறுகிறார்.

அவர் மேலும் கூறுவதாவது, "இருபது ஆண்டுகளுக்குப்பின், 'கோபால்ட்' குண்டு வெடித்த இடத்தில் 4 மாடி உயரமுள்ள மரங்கள் அடர்ந்து வளர்ந்திருக்கும்; இதுவரை எங்குமே கண்டிராத ராட்சச பூச்சிகள் நிறைந்து கிடக்கும்; எங்கும் நிசப்தம் காணப்படும்."


டால்மியாபுரம் போராட்ட நிதிக்காக!

3—10—53 சனி இரவு 10-மணிக்கு
4—10—53 ஞாயிறு இரவு 10-மணிக்கு

M. G. R. நாடக மன்றத்தாரால் — திருச்சி தேவர் மன்றத்தில்

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன்

எம். ஜி. சக்கரபாணி, கே. ஏ. தங்கவேல், எம். கே. முஸ்தபா, என். எஸ். நாராயணபிள்ளை, முத்துக்கூத்தன், எஸ். எம். திருப்பதிசாமி, ஏ. எஸ். மணி, குண்டுமணி, சேதுபதி, ஏ. ரத்னமாலா, ராஜேஸ்வரி, டி. எஸ். மரகதம், சுலோசனு மற்றும் பலர் நடிக்கும்

இடிந்த கோயில்

நாடகம் நடைபெறும்

★

கட்டணம்: 5—0—0, 3—0—0, 2—0—0, 1—0—0
பெண்கள், தரை அணு 0—8—0

முதல் இரண்டு வகுப்புகளும் ரிசர்வ் செய்யப்படும்.

தி. மு. கழகம் திருச்சி.


# தூத்துக்குடி தோழர்கள் காவலில்

★

இன்னும் எத்தனை நாள்?

## சைதையில் கண்டன கூட்டம்

சென்னை, செப். 30—

29—9—53 செவ்வாய் மாலை 6-30 மணிக்கு சைதாப்பேட்டை போஸ்ட் ஆபீஸ் எதிரில், ஜீனிஸ் ரோட்டில், கண்டனக் கூட்டம் நடைபெற்றது. அந்த இடத்திற்கு போலீஸ் அதிகாரிகளிடம் அனுமதி கேட்டிருந்தும், அனுமதி கொடுக்க மறுத்துவிட்டனர். ஆகவே, நடைபாதை வீதி கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்திற்குதோழர் க. முருகேசன் அவர்கள் தலைமை தாங்கினார். தோழர் த. இளங்கோ அவர்கள் பேசினார்.

கூட்டம் நடந்து கொண்டிருக்கையில், கூட்டத்தின் மத்தியில் ஒரு கல் வீசப்பட்டு தோழர் இராமலிங்கம் என்பவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அவர் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை செய்யப்பட்டார்.

கூட்டம் முடிவடைந்ததும், தோழர்கள் சுமார் இரண்டாயிரம் பேர் கொண்ட கூட்டத்துடன், இலட்சிய ஒலிகள் முழங்கிக்கொண்டு சைதாப்பேட்டையின் பல முக்கியத் தெருக்களின் வழியாக ஊர்வலமாகச் சென்று பிறகு கழக இடத்திற்கு வந்து முடிவடைந்தது.

## அஞ்ஞானம் வளர விஞ்ஞான சாதனம்

தருமபுர ஆதீனத்தின் தஞ்சம்!

சென்னை, செப். 28—

தருமபுர ஆதீன நிர்வாகிகள் தங்கள் நிர்வாகத்திலுள்ள 26 கோயில்களில் சைவப் பிரசாரம் செய்ய புதுமுறை பொன்றை கையாள உத்தேசித்துள்ளனர்.

தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய பாடல்களை, கிராமபோன் ரிகார்டுகளில் பதிவு செய்து, இக்கோவில்களின் கோபுரங்களில் வைக்கப்படும். ஒலிபரப்பிகளின் மூலம், எல்லோருக்கும் கேட்கும்படி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கென சுமார் 20 கிராமபோன் பிளேட்டுகள் இப்போது தயாரிக்கப்பட்டுள்ளன. இம்மாதிரி, திருப்பதியில், பிரதிதினமும், காலை நேரங்களில், பிரபந்தங்கள் முதலியன பாடப்பட்டு ஒலிபரப்பப்பட்டு வருகிறதாம்.

கோயிலுக்கு சென்று வழிபட செய்ய இம்முறை ஊக்கமளிப்பதாகவும் இருக்கும் என்று கருதப்படுகிறது. —கேபன்.

## ஏழைக்கு ஏது....!

கல்கத்தா, செப். 30—

"வசதி உள்ளவர்களும் பணம் தராமல், இலவசமாக பிரசவ சிகிச்சை பெற விரும்புவதால், வசதியில்லாத ஏழை மக்கள் பலர் இட நெருக்கடி காரணமாக திருப்பி அனுப்பப்படுகின்றனர். கட்டணம் செலுத்த வேண்டிய வார்டுகள் அநேகமாக காலியாக இருக்க, இலவச வார்டுகளில் இட நெருக்கடி இருந்து கொண்டே இருக்கிறது. இதனால், கல்கத்தாவில் தினம் 60 கர்ப்பப் பெண்கள் இலவச வார்டில் இடமில்லாமல் வீட்டுக்கு திரும்பி விடுகின்றனர்". —என்று, உயர்தர அதிகாரி ஒருவர் கூறினார்.

# செங்கற்பட்டு மாவட்டத் தோழர்களுக்கு!

தமிழர்களின் உரிமைப் போராட்டங்களை 'நான்சென்ஸ்' என்று கூறிய பண்டிதர் வருகிறார். தூத்துக்குடியிலும், கல்லக்குடியிலும் அறவர் பிணமானதற்கும், பலர் காயமுற்றதற்கும், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் உட்பட ஆயிரக்கணக்கான தோழர்கள் சிறைக்குள் தள்ளப்பட்டதற்கும் காரணமான இந்தியாவின் முதல்வர் பண்டித நேரு 3—10—53-ல் மாமல்லபுரம் (மகாபலிபுரம்) வருகிறார்.

நாம் அனைவரும் கருப்புக் கொடி காட்டி, நமது கண்டனத்தைத் தெரிவிக்க, வழி நெடுக, ஆங்காங்கே உள்ள கிளைக் கழகங்கள், நேருவுக்கு, அமைதியாக அணிவகுத்து நின்று கருப்புக் கொடி காட்ட வேண்டுகிறேன்.

C. V. M. அண்ணாமலை
செங். மா. தி. மு. கழகச் செயலாளர்.

## மகாபலிபுரம்

### போதல் - குறிப்பு

அக்டோபர் 3:

காலை, கிண்டி ராஜ பவனத்தை விட்டுக் கிளம்பி, இன்ஜினியரிங் காலேஜ் ரோட், கிண்டி ரோட், லாட்டிஸ் பிரிட்ஜ் ரோட், திருவான்மியூர், கேளம்பாக்கம், திருப்போரூர், பூஞ்சேரி வழியாக மகாபலிபுரம் சென்று, அதே வழியாக ஜவகர் சென்னை திரும்புகிறார்.

## நகரில் காங்கிரஸ் கூலிகள் வெறி......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கத்தண்டு - மூக்குடைந்து — ஊர்ம் செய்ற்று நம தோழர்கள் வேட்டப்பட்டிருக்கின்றனர்.

அடித்துத் தாக்கி அதற்குள்ளாகியும் தேடு மட்டுமில்லாமல் ஏராளமான நம் தோழர்களை ஆங்காங்கு போலீசார் கைது செய்து வானில் ஏற்றிச் சென்றிருக்கின்றனர்.

தோழர்கள் கே. ஈ. சம்மந்தன், எம் ஆர். பாண்டியன், உள்ளிட்ட சுமார் 30 தோழர்கள் ஜெனரல் ஆஸ்பத்திரியில், சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள்.

அடிதடிக்குள்ளான அத்தனை தோழர்கள் விவரமும், கைதான தோழர்கள் விவரமும் நமக்கு இந்நேரம் வரை கிடைக்க வில்லையாதலால், அவை நாளை இதழில் வெளிவரும்.

சிம்ப்சன் கம்பெனி எதிரில் தாக்குதலுக்காளான நம தோழர்களில் சிலர்—தோழர்கள் சென்னை தி மு. கழகச் செயலாளர் கே. எம். கண்ணபிரான், கே. ஈ. சம்பந்தம், எம். ஆர். பாண்டியன், வ. சங்கரநாராயணன் ஆவர். (முழு விவரம் நாளை.)

மவுண்ட் ரோடு தபாலாபீசுக்கு எதிரில் கருங்கொடி தாங்கி நின்றிருந்த தோழர்கள் காசிநாதன், வி. கிருஷ்ணசாமி, ரத்தினம், வேணுகோபால். ஆர். கிருஷ்ணன், மற்றும் பலர் (விவரம் நாளை.)

கைது செய்யப்பெற்று வானில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளனர். வண்ணையம்பதியைச் சேர்ந்த கே. வி. கே. சாமி, வெங்கடேசன், வானமாமலை ஆகியோரும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

## கோபி

### தோழர்களுக்கு

அக்டோபர் 4-ந்தேதி இந்திய பிரதமர் நேரு பண்டிதர் கோவை மாவட்டத்தில் பவனி வருகிறார். அதுகாலை அவர் நடுப்பகல் லோயர் பவானி அணைக்கட்டை பார்வையிட வாயிருப்பதால், கோவை மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுவின் தீர்மானப்படி அன்று லோயர் பவானியில் கருப்புக் கொடி காட்ட, கோபி தோழர்கள் தங்கள் பெயர்களை, கோபி தி. மு. கழகச் செயலாளர் என். கே. யாகூப் வசம் பதிவு செய்துகொள்ள வேண்டப்படுகிறார்கள்.

## நேரு செல்லும் மதுரையில்....

நாளை 3-10-53-ந் தேதி மதுரை வருகிற நேரு பண்டிதருக்கு, கிழக்காணும தோழர்களின் தலைமையில் கருப்புக் கொடி காட்டப்படும். கழகத் தோழர்கள் கட்டுப்பாடுடனும், அமைதியாகவும் நடந்து கொள்ள கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

எஸ். முத்து, எம். அய்யாசாமி, கே. எஸ். ராசமான், பெ. இரத்தினம், எம். ஆர். கணேசன், என் கிருஷ்ணசாமி, மதியழகன், மு வசனப்பித்தன், பி. கே. சேதுராமன், கு. வேலு, ல வ. கிருஷ்ணன், எம். வி. மணி, பாலு, ராயப்பன், ராமானுசம், அ. பெரியசாமி, அ. கந்தசாமி, யாகூப். மு தமர், தங்கையா, பி. எஸ். மணியன், த. முத்தையா

லண்டன், அக் 1—

அணுசக்தி விஞ்ஞானியும், ஜப்பான் மீது வீசப்பட்ட முதல் அணுகுண்டைத் தயாரித்தவருமான புரொபசர் எச். எஸ். டபின்யூ. மாஸ்ஸி, அக். 3-ந் தேதி இந்தியா வருகிறார்.

## நேருவின்..........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முறைகளைக் கண்ட நேரு, "தகப்பிரமை" கொண்டவரானார் என்றே கூறவேண்டும் நாவடக்கம் தெரியாது, "நான்சென்ஸ்" என்று கூறிய நேருவுக்கு, 'நல்ல பாடம், நல்ல பாடம்,' என்று பல்லோரும் பேசினர்.

வடநாட்டு அடிமை வியாபாரி நேருவுக்கு, சென்னை காட்டிய இவ்வெறுப்பு தமிழகத்தின் பிற பகுதிகளில் அவர் நுழையும்போது நடக்கப் போகும் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்துக்கு ஒரு முன்னறிவிப்பாகு மென்பதை நேரு நன்கு உணர்ந்து கொண்டிருப்பார்.

# ஆந்திர மந்திரிகள் ஐவரின் வாழ்க்கைக் குறிப்புகள்

புதிய ஆந்திர மாநிலப் பிரதமர் ஆந்திர கேசரி டி. பிரகாசத்துக்கு இப்பொழுது வயது 85 நடக்கிறது. இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட முதியவர்களில் அவர் முதல்வர்.

அவர் ஓர் சிறந்த வழக்கறிஞர். காங்கிரஸ் ஒத்துழையாமை காலத்தில், தொழிலை உதறித் தள்ளிவிட்டு உரிமைப் போராட்டத்தில் துள்ளிக் குதித்தவர்.

'சுயராஜ்யா' என்ற ஆங்கில தினசரியின் உரிமையாளராகவும், ஆசிரியராகவும் இருந்து அவர், ஆங்கிலம் கற்றிருந்த திராவிடரிடை தேசியக் கனலை மூட்டினார். பத்து ஆண்டுகளுக்குக் குறையாது அவ்விதம் சேவை செய்தார்.

அவர், டெல்லி சட்ட சபையின் உறுப்பினராக 1926 ஆண்டு முதல் 193[illegible] வரை இருந்தார். பல ஆண்டுகள் ஆந்திர காங்கிரஸ் கமிட்டியின் தலைமைப் பதவி அவரிடம் இருந்தது. 30 ஆண்டுகளுக்கு அதிகமாக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினராக அவர் இருந்திருக்கிறார்.

1937-ல் ஏற்பட்ட ஆச்சாரியார் காங்கிரஸ் மந்திரி சபையில் நிலவரி மந்திரியாகவும், 1946-47ல், சென்னை சர்க்காரின் ஓராண்டு பிரதமராகவும் பதவியிலிருந்தார்.

காங்கிரசைவிட்டு விலகி, ஆச்சாரிய கிருபளானியுடன் சேர்ந்து கிஸான் மஜ்தூர் பிரஜா கட்சியை அமைக்கினார். பின்னர், கே. எம். பி. கட்சி, சோஷலிஸ்ட் கட்சியுடன் இணைந்து, பிரஜா-சோஷலிஸ்ட் கட்சியாக மாறியது அக்கட்சியின் சென்னை மாநிலத் தலைவராக பிரகாசம் இருந்து வந்தார்.

பொதுத் தேர்தலில் அவர், சென்னை அவறமுகச் தொகுதியில் நின்று தோற்றுவிட்டார். பின்னர், ஆந்திராவில் நடைபெற்ற உப தேர்தலில் நின்று வெற்றி பெற்றார்.

புதன் வார முதலில், பி-சோ. கட்சியை விட்டு விலகி, காங்கிரஸ் கட்சியின் கூட்டு உறுப்பினர் ஆனார் பிரகாசம்.

## என். சஞ்சீவி

துணைப் பிரதமராக இருக்கிற என். சஞ்சீவி (ரெட்டி)யாருக்கு வயது 40 ஆகிறது. அனந்தபூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராம விவசாயி பள்ளிப் படிப்பை அரைகுறையாக முடித்துக்கொண்டு காங்கிரசில் சேர்ந்தார். ஆந்திர காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியாக 1938-ல் பதவிக்கு வருகிற வரையில் அவர் பெயர் வெளிக்குத் தெரியாமலே இருந்தது.

அவர் பலமுறை சிறைக்குச் சென்றிருக்கிறார். 1947—ல், அரசியல் ஆக்கக் குழு உறுப்பினராகவும், பிறகு சென்னை சட்ட சபை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சென்ற பொதுத் தேர்தலில் அவருடைய தங்கையின் கணவரும் கம்யூனிஸ்ட் தோழருமான நாகி (ரெட்டி)யால் தோற்கடிக்கப்பட்டார். கம்யூனிஸ்ட் தோழரின் உடன்பிறப்பு, சஞ்சீவியின் தாரமாகும்.

காளாஸ்தி தொகுதி சட்ட சபை உறுப்பினரை ராஜிநாமா செய்யச் செய்து, உப தேர்தலில் சஞ்சீவி வெற்றி பெற்றார். இந்தத் தேர்தலில், கம்யூனிஸ்ட் கட்சி, அபேட்சகரை நிறுத்தவே இல்லை.

## தென்னேட்டி விஸ்வநாதம்

1896-ம் ஆண்டில் பிறந்து, முதலியாகப் படியின்று திருவனந்தபுரம் சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்புப் பட்டம் பெற்றார். விசாகை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக நீண்ட காலம் இருந்தார்.

1937—ல், விசாகப்பட்டினம் தொகுதி வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, சென்னை சட்டசபை உறுப்பினராகி, நிலவரி மந்திரி பிரகாசத்தின் பார்லிமெண்டரி காரியதரிசியாகப் பணி புரிந்தார்.

பிரகாசம் ஜமீன் ஒழிப்பு விசாரணைக் குழுவின் செயலாளராக இருந்து, நில சம்பந்தமான அறிவை விளக்கமாகப் பெற்றார்.

1946-ம் ஆண்டு தேர்தலில் மறுமுறையும் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிரகாசம் பிரதமராக இருந்த ஓராண்டு காலம் வரையில், அவருடைய காரியதரிசியாக இருந்தார். 1947 முதல் 1951-வரையில் விசாகை நகராட்சி மன்றத் தலைவராக இருக்கிறார்.

1951—ல் நகராட்சி மன்றத் தலைமைப் பதவியையும், சட்ட சபை உறுப்பினர் பதவியையும், தான் காங்கிரசிலிருந்து விலகிவிட்டதால், ராஜிநாமா செய்துவிட்டு, சுயேச்சையாகியாக உப தேர்தலில் நின்று போட்டியின்றி சென்னை சட்டசபை உறுப்பினர் ஆனார்.

1952-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கே. எம் பி. சார்பில் நின்று வெற்றிபெற்று சென்னை சட்டசபை எதிர்க்கட்சித் தலைவராக செயலாற்றினார். ஆந்திர பி எஸ். பி-யின் தலைவர். பிரிவினை ஆய்வுக் குழுவில் அவர் உத்தியோகப் பற்றற்ற உறுப்பினராக இருந்தார்.

சிறந்த விவாதத் திறமை பெற்றிருப்பவர் என்பதோடு, தென்னேட்டி விஸ்வநாதம், பிரகாசத்தின் நீண்ட காலைய நண்பர் ஆவார்.

## கே. கோடி (ரெட்டி)

சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கோட்டி ரெட்டி வாரிபள்ளி என்ற சிற்றூரைச் சேர்ந்தவர் அவர். 1887-ல் பிறந்தார்.

மதனபள்ளி உயர்நிலைப் பள்ளியிலும், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலும், இங்கிலாந்தில் சட்டப் படிப்பும் படித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். முதல் முதலாக அவர் சென்னையில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார். சில ஆண்டுகள் சென்று தொழில் நிமித்தமாகக் கடப்பை நகருக்குப் போய்விட்டார்.

தோழர் கோடி அவர்கள் மாவட்ட உயர்நிலைக் கல்வி போர்டின் உறுப்பினராகவும், சென்னை மேல் சபை, சட்ட சபை உறுப்பினராகவும் அதன் துவக்க முதல் இருந்துவந்து இருக்கிறார். சென்னை சட்ட சபை காங்கிரஸ் கட்சியின் அணைத் தலைவராக அவர் இருந்திருக்கிறார்.

பிரகாசம் மந்திரி சபையில் அவர் இந்து மத பரிபாலன இலாகாவையும், மது ஒழிப்பு இலாகாவையும் நிர்வகிக்கும் மந்திரியாக இருந்து இருந்து வந்திருக்கிறார்.

மும்முறை சிறை சென்று இருக்கிறார். பல ஆண்டுகள் ஆந்திர பல்கலைக் கழக செனேட் உறுப்பினராகவும், தற்சமயம் சென்னை பல்கலைக் கழக செனேட் உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

ரெட்டி ஜன சங்கத்தின் செயலாளர் அவர். அம்மாவட்டத்தில் உள்ள பழம்பெரும் காங்கிரஸ்காரர் அவர்.

## டி. சஞ்சீவியா

கர்னூல் மாவட்டத்தில் உள்ள பெத்தபாடுரத்தில் 1921-ல் இவர் பிறந்தார். இவர் ஒரு வழக்கறிஞர். 1950-ல் இடைக்கால பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1952-ல் கர்னூல் ஒதுக்கப்பட்டத் தொகுதிக்கு இவர் சென்னை சட்ட சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கூட்டுறவு மந்திரியாக ஆச்சாரியார் மந்திரி சபையில் இருந்தார்.

# கர்நாடகம் - விரிகிறது

## 7 தாலூகாக்கள் மைசூருடன் இணைந்தன

பெங்களூர், அக். 1—

ஆந்திர மாநில அமைப்பைத் தொடர்ந்து, இன்று, பெல்லாரி மாவட்டத்திலுள்ள பெல்லாரி, ஹடகல்லி, ஹர்பனஹள்ளி, ஹாஸ்பெட், குட்லிகி, காஞ்சூர் சிருகுப்பா ஆகிய ஏழு தாலூகாக்களும் மைசூர் மாநிலத்துடன் இணைந்தன. இதன் விஸ்தீரணம் சதுரமைல் 3 821. ஜனத்தொகை 7,73,712.

மேற்கண்ட ஏழுதாலூகாக்களையும் சேர்த்து மைசூர் மாநிலத்தின் விஸ்தீரணம் 33,310 சதுரமைல். ஜனத்தொகை ஏழு தாலூகாக்களையும் சேர்த்த 5 சென்னை அசெம்பிளி மெம்பர்கள் மைசூர் அசெம்பிளி மெம்பர்கள் தொகை 105 ஆகிறது. இன்று, அந்த மாநிலம் முழுதும் விடுமுறை. ஏழு தாலூகாக்களிலும் முன் போலவே மதுவிலக்கு நீடிக்கும்.

கெஜட் பதிவில்லாத சிப்பந்திகள் மைசூர் சர்க்காரில் சர்வீசில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

# "நம் நாடு"

## வெளியூர் ஏஜெண்டுத் தோழர்கட்கு

"நம் நாடு" வெளியூர் ஏஜெண்டுத் தோழர்கட்கு, இன்று (1—10—53) செப்டம்பர் மாத பில் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றது. பில் பாக்கித் தொகை, 10—10—53-க்குள் இங்கு கிடைக்கும்படி அனுப்பிவைக்க வேண்டுகிறோம். பில் பாக்கிகளை ஒரே தடவையில் அனுப்பாமல், 2, 3 தடவைகளில் அனுப்பியும், ஒவ்வொரு பில்லிலும் பாக்கி வைத்துக்கொண்டுவரும் ஒரு சில ஏஜண்டுகளுக்குக் கடிதம் எழுதியும், கவனிக்காமலிருக்கிறார்கள் செப்டம்பர் மாத பில் பாக்கியுடன், பழைய பில் பாக்கியும் சேர்த்து ரூபாய் அனுப்பப்படாவிட்டால், பாக்கியுள்ள தோழர்கட்கு, 10-10-53-ல் "நம் நாடு" அனுப்புவதை நிறுத்தி, ஏஜன்சியையும் ரத்து செய்து பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். மணியார்டர், இன்ஷ்யூர், பாங்கி ட்ராப்டுகள் தனிப்பட்டவர் பெயருக்கு அனுப்பாமல், பொறுப்பாளர், "நம் நாடு," ராயபுரம், சென்னை—13 முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். "நம் நாடு" அதிகம் இதழ்கள் வேண்டும் என்று விரும்பும் தோழர்கள், டிபாசிட் தொகையும், இதழ் 1-க்கு ரூ. 2—0—0 வீதம் அதிகம் சேர்த்து அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

"நம் நாடு" பில் பாக்கியுள்ள தோழர்கள் பெயரும் 'நம் நாட்'டில் தொடர்ந்து வெளியிட்டுவரும்படி நேரிடும் என்பதையும் தெரியப்படுத்திக்கொள்கிறோம்.

சென்னை: இராயபுரம்
1—10—53.

பொறுப்பாளர்,
"நம் நாடு"

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டிதெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.